## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1011**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**36**

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# கிறிஸ்தவர்களும் திராவிட இயக்கமும்!



‘2006-இல் தி.மு.க. அரசு அமைந்தவுடன், சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டு, நீதியரசர் மிஸ்ரா ஆணையத்தின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு, பிற்படுத்தப் பட்டோருக்கான 30 சதவிகித இடஒதுக்கீட்டி லிருந்து முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகிதமும், கிறிஸ்தவர்களுக்கு 3.5 சதவிகிதமும் தனி உள் இடஒதுக்கீடு வழங்கி 12.09.2007 அன்று கலைஞர் ஆணையிட்டார். ஆனால், கிறிஸ்தவர்கள் தங்களுக்குத் தனி இடஒதுக்கீடு தேவையில்லை எனக் கூறிவிட்டதால், அந்த தனி இடஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டது. பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில் இஸ்லாமிய சமூகத்திற்கான 3.5% தனி இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டது’ என்பதை மைனாரிட்டி தி.மு.க. தொடரின் 12-வது வாரத்திலேயே குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், இரண்டு சமூகங்களுக்கும் சுதந்திர இந்தியாவுக்கு முன்பே தனி இடஒதுக்கீடு இருந்தது. 1954-ஆம் ஆண்டில், ‘மதரீதியான இடஒதுக்கீடு கூடாது’ என இஸ்லாமியர்களுக்கான 7 சதவிகித இடஒதுக்கீடு ரத்து செய்யப்பட்ட நிலையில், அந்த இடஒதுக்கீட்டைத்தான் நீண்ட நெடிய போராட்டங்களுக்குப் பின்னர் கொடுத்தார் கலைஞர். கிறிஸ்தவர்கள் தனி இடஒதுக்கீடு வேண்டாம், பிற்படுத்தப்பட்டோருக்கான பட்டியலிலேயே தங்களுக்கான இடங்களையும் பெற்றுக்கொள்கிறோம் என்பது அவர்களின் நிலைப்பாடாக இருந்தது. அந்த நிலைப்பாடு சரியா, தவறா என்ற விவாதங்களைத் தாண்டி, கிறிஸ்தவர்களுக்கும் தனி ஒதுக்கீடு தரலாம் என்ற கலைஞர் எண்ணத்தை முதன்மைப் படுத்திப் பார்ப்பது அவசியம். ஏனெனில், இஸ்லாமியர்களுக்கும் திராவிட இயக்கத்துக்கு மான பந்தம் நீதிக்கட்சி - சுயமரியாதை இயக்க காலத்திலேயே உருவானதைப் போல கிறிஸ்தவர்களுக்கும் திராவிட இயக்கத்துக்குமான பந்தமும் நீதிக்கட்சி - சுயமரியாதை இயக்க காலத்திலேயே தொடங்கிவிட்டது.

### நீதிக்கட்சி காலத்தில்

நீதிக்கட்சி உருவான நோக்கத்திலேயே அதற்கான காரணமும் புதைந்திருக்கிறது. ஆரிய உயர்சாதி அல்லாதோருக்கான கல்வி - வேலைவாய்ப்பு, அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் என்பதுதான் நீதிக்கட்சி உருவானதற்கான அடிப்படை நோக்கம். அந்த நோக்கத்திற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

1901-இல் வெளியான மக்கள்தொகை கணக்கீட்டின்படி, ஆரிய உயர்சாதியினர் 3.5 சதவிகிதம் மட்டுமே இருந்தனர். ஆனால், அவர்களில் சுமார் 70 சதவிகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர். மக்கள்தொகையில் 96.5 சதவிகிதம் இருந்தது ஆரியரல்லாத மற்ற சாதியினரும், இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும்தான். ஆனால், பெரும்பாலானோர் படித்திருக்கவில்லை. அதிகபட்சமாக செட்டியார்கள் மட்டுமே 32 சதவிகிதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர். கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் 16.2 சதவிகிதம் மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருந்தனர். பிற்படுத்தப்பட்ட- தாழ்த்தப்பட்ட சமூகங்களைப் போலவே கிறிஸ்தவர்களும் கல்வியில் மிகவும் பின்தங்கி தான் இருந்தனர்.

கல்வியில் மட்டுமல்ல வேலைவாய்ப்பிலும் இதுதான் நிலைமை. படித்திருந்தால்தானே வேலைகளில் பிரதிநிதித்துவம் கிடைக்கும்!

1918-ஆம் ஆண்டு கணக்கின்படி சென்னைப் பல்கலைக்கழகத்தில், அன்றைய காலகட்டத்தில் அதிகபட்ச ஊதியமான 10 ரூபாய்க்கு மேல் ஊதியம் வழங்கப்பட்ட பணிகளில் 42.2 சதவிகிதம் இந்து ஆரியர் மட்டுமே இருந்தனர். அதாவது, மக்கள்தொகையில் 3.5 சதவிகிதம் மட்டுமே இருந்த இந்து ஆரிய சாதியினர், 10 ரூபாய்க்கு மேல் ஊதியம் தரப்பட்ட வேலைகளை 12 மடங்கு ஆக்கிரமித்து வைத்திருந்தனர். இந்துக்களில் மற்ற அனைத்து சமூகத்தினரும் சேர்த்தே 36.5 சதவிகிதமும், இஸ்லாமியர்கள் 5.5 சதவிகிதமும், கிறிஸ்தவர்கள் 4.95 சதவிகிதமும் மட்டுமே இருந்தனர். துணை ஆட்சியர்களில் 77 பேர் இந்து ஆரிய சாதியினராக இருந்தனர். இதர இந்துக்கள் 25 பேரும், இஸ்லாமியர்கள் இருவரும், கிறிஸ்துவர்கள் 5 பேரும் மட்டுமே இருந்தனர்.

ஒட்டுமொத்த பிற்படுத்தப்பட்டோரின் மக்கள்தொகையில் ஒப்பிடும்போது, கிறிஸ்தவர்கள் கணிசமான இடங்களைப் பிடித்திருந்தாலும், அவர்களின் மக்கள் தொகைக்கேற்ப முழுமையான பிரதிநிதித்துவம் இல்லாமல்தான் இருந்தது. அதை முதன்முதலில் சரிசெய்ய முனைந்த இயக்கம் நீதிக்கட்சி.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் படி இந்தியாவில் இரட்டை ஆட்சி முறை அமலுக்கு வந்து, முதல் தேர்தலிலேயே நீதிக்கட்சி சென்னை மாகாணத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது. 1921-ஆம் ஆண்டில் பனகல் அரசர் ஆட்சி அமைத்தவுடன் முதல் சமூக நீதி உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார். 05.08.1921-இல் சென்னை சட்டமன்றத்தில் டாக்டர் நடேசனார், “பார்ப்பனரல்லாதாருக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அரசு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் வகையில், அரசுப் பணிகளுக்குப் பார்ப்பனரல்லாதோரை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும்” என்று தீர்மானம் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானத்தின்படி, 16.09.1921-இல் மக்கள் தொகையின் அடிப்படையில் அரசுப் பணிகள் வழங்க வேண்டும் என்ற முதல் சமூக நீதி ஆணை உருவானது.

5:2:2:1 என்ற விகிதாச்சாரத்தின்படி அரசு வேலைகளில் இந்து ஆரிய சாதி அல்லாதோர், இந்து ஆரியர், இஸ்லாமியர், கிறிஸ்தவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வழி செய்தது இந்த ஆணை. அதாவது, பத்து இடங்கள் இருந்தால் 5 இடங்கள் பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், 2 இடங்கள் பார்ப்பனர்களுக்கும், 2 இடங்கள் இஸ்லாமியர்களுக்கும், ஒரு இடம் கிறிஸ்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். எல்லாருக்கும் எல்லாம் என்ற இன்றைய திராவிட மாடலின் வலுவான அடித்தளம் அங்கிருந்துதான் தொடங்குகிறது. பார்ப்பனர்களின் ஏகபோக ஆதிக்கத்தைத் தடுத்து, சிறுபான்மையினர் உள்ளிட்ட அனைத்து சமூகங்களுக்கும் பிரநிதித்துவத்தை சட்டப்படி உறுதி செய்த அந்த ஆணையை நீதிக்கட்சி அரசால் உடனடியாகச் செயல்படுத்த முடியவில்லை. காரணம், அதிகாரிகள். அந்த ஆணையை நடைமுறைப்படுத்த மறுத்தனர்.

எனினும் அந்த ஆணையை மேலும் சரி செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஆரியரல்லாத இந்துக்கள், சிறுபான்மையினரிடையே நிலவியது. இதே காலகட்டத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் கொடுத்தே தீர வேண்டுமென்று காங்கிரசில் பெரிய கலகமே நிகழ்த்திக்கொண்டிருந்தார் பெரியார். காங்கிரஸ் இதனைப் பொருட்படுத்தாத நிலையில், ஒருகட்டத்தில் அந்தக் கட்சியில் இருந்து வெளியேறி, 1925-இல் சுயமரியாதை இயக்கம் கண்டார். இவ்விவகாரத்தில் ஒரே கருத்தைக் கொண்டிருந்த நீதிக்கட்சிக்கு அவ்வப்போது அறிவுரையும் தந்து கொண்டிருந்தார். 1928-ஆம் ஆண்டு சுப்பராயன் தலைமையில் நீதிக்கட்சி ஆதரவோடு அமைந்த அரசில், மீண்டும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அமல்படுத்தினார் அப்போதைய அமைச்சராக இருந்த நீதிக்கட்சித் தலைவர் முத்தையா முதலியார்.

அரசு அலுவலகங்களில் 12 இடங்களுக்குப் பணி அமர்த்த வேண்டுமென்றால், ஆரிய ரல்லாத இந்துக்கள் 5 பேர், இந்து ஆரியர் இருவர், இஸ்லாமியர்கள் இருவர், கிறிஸ்தவர்கள் இருவர், தாழ்த்தப்பட்டோர் ஒருவர் என நியமனம் செய்ய வேண்டுமென்றது அந்த ஆணை. இப்படி, இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சேர்த்து சமூக நீதியை சிந்தித்த முதல் இயக்கம், நீதிக்கட்சிதான். நீதிக்கட்சியின் எண்ணத்தில் இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் அந்நியர்களாக இல்லாமல் திராவிட இனத்தின் அங்கமாகவே இருந்ததுதான் அதற்குக் காரணம்.

நீதிக்கட்சி இப்படி சட்டரீதியாக கிறிஸ்தவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கியது என்றால், சமூகரீதியாக கிறிஸ்தவர்களை அரவணைத்தவர்கள் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும். இஸ்லாமியர்களை அரவணைத்ததைப் போல, கிறிஸ்தவர்களையும் அரவணைத்தனர். அவற்றை அடுத்த வாரத்தில் காண்போம்.

**...நீளும்**

> **இஸ்லாமியர்களுக்கும் திராவிட இயக்கத்துக்குமான பந்தம் நீதிக்கட்சி - சுயமரியாதை இயக்க காலத்திலேயே உருவானதைப் போல கிறிஸ்தவர்களுக்கும் திராவிட இயக்கத்துக்குமான பந்தமும் நீதிக்கட்சி - சுயமரியாதை இயக்க காலத்திலேயே தொடங்கிவிட்டது.**

---

## சென்னையில் முற்போக்கு புத்தகக் காட்சி!

தி.மு.கழகத்தின் பவள விழா நிறைவை, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அறிவுத் திருவிழாவாக 9 நாட்கள் கொண்டாடுகிறது கழக இளைஞர் அணி. நவம்பர் 8-ஆம் தேதி காலையில் ‘காலத்தின் நிறம் கருப்பு - சிவப்பு’ நூல் வெளியீடு, அதனைத் தொடர்ந்து ‘இருவண்ணக் கொடிக்கு வயது-75’ என்னும் இருநாள் கருத்தரங்கம், அதில் 10 அமர்வுகள் என இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் கழக நிகழ்வுகளாக நடைபெறுகின்றன. நூலை வெளியிடுவதற்கு முன்பாக, வள்ளுவர் கோட்டத்தில் அரசியல் நூல்கள் மட்டுமே இடம்பெறும் புத்தகக்காட்சியை, தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கிவைக்கவுள்ளார். நவம்பர் 8-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை இந்த முற்போக்கு புத்தகக் காட்சி நடைபெறவுள்ளது.

திராவிட இயக்கம் சார்ந்த நூல்களைக் கொண்ட புத்தகக் காட்சியாக மட்டும் அல்லாமல், பெரியாரிய-அம்பேத்கரிய-மார்க்சிய என அனைத்து முற்போக்கு தளங்களிலும் செயல்பட்டு வரும் பதிப்பகங்கள் மற்றும் விற்பனையாளர்களை அழைத்து மாபெரும் அறிவுத் திருவிழாவாக, தமிழ்நாட்டு வரலாற்றில் இதற்கு முன்பு இல்லாத வகையில், புதுமையான முயற்சியாக இந்த முற்போக்கு புத்தகக் காட்சியை நடத்துகிறது தி.மு.க. இளைஞர் அணி.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், கருஞ்சட்டைப் பதிப்பகம், நீலம் பப்ளிகேஷன்ஸ், பாரதி புத்தகாலயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், என்.சி.பி.ஹெச்., எதிர் வெளியீடு, சீர் பதிப்பகம், கருப்புப் பிரதிகள் என முற்போக்கு நூல்கள் வெளியீட்டில் முன்னணியில் இருக்கும் 40-க்கும் மேற்பட்ட பதிப்பகங்கள், தமிழ்நாட்டின் அறிவுச் சூழலை வளர்த்தெடுக்கும் இம்முயற்சிக்குப் பேராதரவு தெரிவித்து, முற்போக்கு புத்தகக் காட்சியில் பங்கெடுக்க ஆர்வம் காட்டியுள்ளன. வாசிப்பின் மீது ஆர்வங் கொண்டோருக்கும், அரசியல் சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள விரும்பும் இளைஞர்களுக்குமான மிகப்பெரிய விருந்தாக இந்த முற்போக்கு புத்தகக் காட்சி நிச்சயம் அமையும்.

புத்தகக்காட்சியில் அனுமதி இலவசம். அனைவரையும் வரவேற்கிறது அறிவுத் திருவிழா!

---

## ஃப்ளாஷ்பேக்





தமிழ் ராஜேந்திரன்

### திண்டுக்கல்லில் திருவள்ளுவர் சிலை!

2015-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, திண்டுக்கல், திருவள்ளுவர் இலக்கிய பேரவை அமைப்பின் தலைவர் புலவர் துரை முருகையா, செயலாளர் வசந்தி கணேசன், பொருளாளர் ராஜேந்திரன் ஆகியோர் சந்தித்து, திண்டுக்கல் நகரில் திருவள்ளுவர் சிலை அமைக்க ஆதரவு வேண்டினர். அந்த சிலை நிறுவுவதற்கு அனுமதி கிடைக்காத நிலையில், மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் வாதாடி, நான் உத்தரவு பெற்று தந்தேன். தலைவரைச் சந்தித்த இந்தப் படம் அந்த வரலாற்றைப் பேசும் படமாகும்.

**- தமிழ் ராஜேந்திரன்,**
**வழக்கறிஞர்,**
**செயலாளர், கரூர் தமிழ்ச் சங்கம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## நறுக்குவு

### கடலூரில் கலைஞர் கார் முற்றுகை!

1967-ஆம் ஆண்டு பிப்ரவரி 15 அன்று, சென்னையில் முதற்கட்ட தேர்தல் முடிவடைந்து, 18 மற்றும் 21 தேதிகளில் இரண்டு மற்றும் மூன்றாவது கட்ட தேர்தல்கள் நடக்கும் தொகுதிகளுக்குப் பிரச்சாரம் சென்றார், கலைஞர். கடலூர் பிரச்சாரத்தின்போது, கலைஞரின் காரை முற்றுகையிட்டு, கல்வீசித் தாக்கினர். போலீசார், வன்முறையாளர்களை விரட்டியடித்து, கலைஞருக்கு மாவட்ட எல்லை வரை பாதுகாப்பு வழங்கி அனுப்பிவைத்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131